நடுவில் இருப்பதிலேயே திருப்தி அடைந்துவிட வேண்டாம். ஆழத்தில் கொண்டுபோய் உங்கள் வலைகளைப் போடுங்கள்.

– புனித இரண்டாம் ஜோன் போல்

இன்றைய முதல் வாசகத்தில், இறைவாக்கினர் எசாயா, மழையையும், பனியையும் கடவுளின் வார்த்தையோடு தொடர்புபடுத்துகிறார். மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கிவந்து, குடிப்பதற்கு தண்ணீரையும், நிறைந்த விளைச்சலைத் தரும் விதமாக நிலத்தை நனைத்து, வளமுறச் செய்கிறது. இதுபோன்றே கடவுளின் வார்த்தையும் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றும் விதமாக, அது தன் பணியைச் செய்யும் என்று இறைவாக்கினர் கூறுகிறார்.

இன்றைய திருப்பாடலிலும் இயற்கை மற்றும் படைப்புகளின் முழுமையால் நிறைந்துள்ளது. நிலத்தில் கோதுமை வளர்ந்து நிறைவான அறுவடையைத் தருவது வரை கடவுள் பூமியின் மீது அக்கறைக் கொண்டு அதை ஆசீர்வதிக்கின்றார். மேலும், பழங்களைத் தரும் விதத்தில் நிலத்தையும் பண்படுத்தி தயாரிக்கின்றார். மலைகள் மகிழ்கின்றன, ஆடுகள் புல்வெளியில் மேய்கின்றன. பள்ளத்தாக்குகள் கோதுமையால் நிறைந்துள்ளன. இயற்கையும் இறைவனின் உன்னதசெயல்களை எடுத்துரைக்கின்றன.

ஆனால், நாம் பார்க்கின்ற எல்லாமே அழகானவை மட்டுமல்ல; படைப்புகளுக்கும் ஒரு வரையறை உண்டு. எல்லா நாளுமே அவை பூத்துக்குலுங்குவதில்லை. இதனால் தான் புனித பவுல் கூறுகின்றார். மேலும் கடவுளால் அனைத்து குழப்பங்கள் அகற்றப்படவும், அது முழுமையாக மீட்டெடுக்கப்படவும், படைப்புகள் கூக்குரலிடுவது போல, கடவுளின் மீது நம்பிக்கைக் கொண்ட நாம் அனைவரும், அதே நம்பிக்கை, உறுதி மற்றும் , பொறுமையோடு, மனிதகுலத்தின் இறுதியான, உறுதியான மீட்புக்கு காத்திருக்கிறோம்.

இதனால் தான், மீட்பின் நற்செய்தியை அறிவிக்கும் பணி தொடர வேண்டும். நற்செய்தியில் காணப்படும் உவமையில், நற்செய்தியை எவ்வாறு அறிவிக்க வேண்டும் என்பதை தம்முடைய சீடர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இயற்கையை உருவகப்படுத்துகிறார். தாங்கள் செய்யும் பணியில் பலன் எளிதில் கிடைக்கவில்லையென்றால், அவர்கள் சோர்ந்துபோகக்கூடாது என்றும், தொடர்ந்து நற்செய்தியை அறிவிக்கும் பணியை தொடர வேண்டும் என்றும் கூறுகிறார். கடவுளின் வார்த்தையை அறிவிக்கும் பணியில் விடாமுயற்சியோடும், நம்பிக்கையோடும் தொடர்ந்து செல்ல வேண்டும். நல்ல நிலத்தில் வளரும் விதைகள் மகத்தான பலன்களைத் தரும். இறைவார்த்தைகளை உண்மையாக விதைப்பவர்களாக இருப்போம். ✝

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா: 55:10-11
திருப்பாடல்: 65:10-14
உரோமையர்: 8: 18-23
மத்தேயு: 13: 1-23

**வாரம் ஒரு வசனம்**

மீட்பளிக்கும் நற்செய்தியை அறிவிக்கும் பணி தொடர வேண்டும்

INTERNAL CIRCULATION ONLY
BUL 28/2020

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

12 ஜூலை 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் 15 ஆம் ஞாயிறு
விவிலிய விழிப்புணர்வு ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்




மாதாந்திர கருப்பொருள்:

**நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்**

# வார்த்தையை விதைப்பவர்கள்

இன்றைய ஞாயிறு வாசகங்கள் அனைத்தும் இயற்கையின் சாயல்களால் நிறைந்துள்ளன. இயற்கை, அது முழுமையானது. செயலற்றது அல்ல, ஆற்றல் வாய்ந்தது. தொடர்ந்து மாறிக்கொண்டே இருப்பது. உண்மையில் எதுவும் அப்படியே இருப்பதில்லை. அதுபோலவே, இயற்கையும், அது பெரியதாகவோ அல்லது சிறியதோ, இருப்பதற்குக் காரணம் உள்ளது. இயற்கை, பல வழிகளில் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு, அதன் நோக்கத்தை நிறைவேற்றுகிறது.